1. முன்னுரை

திருவாளர் வேட்டுவப்பாளையம் பொது கழிவு நீர் சுத்தகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் பிரைவேட் லிமிடட் தங்களது அலுவலகத்தை SF No. 40, சம்பாவயல் தோட்டம், வேட்டுவப்பாளையம், மங்களம், திருப்பூர் என்ற முகவரியில் அமைத்து புதிதாக பொது கழிவு நீர் சுத்தகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம் உருவாக்கி தங்கள் பிளிச்சிங் உறுப்பினர் தொழிற்சாலயில் உற்பத்தியாகும் கழிவு நீரை சுத்தகரிப்பு செய்து மீண்டும் உபயோகப்படுத்த திட்டமிட்டுள்ளது. அதற்காக இந்நிறுவனம் முழு அளவிலான பொது கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம், ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் பிளான்ட் பல படி நிலை இவாப்பரேட்டர் ஆகியவற்றை அமைத்து **பூஜிய நீர் வெளிறேற்றும் கொள்கையை அடைய** முடிவுசெய்துள்ளது.

உறுப்பினர் சலவைப்பட்டறைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் பொது கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படுகிறது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட நீர் மூன்று நிலை எதிர்மறை சவ்வூடு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு இங்கிருந்து உருவாகும் கழிவு நிராகிரிப்பு (Rejects) பல படி நிலை இவாப்பரேட்டரில் சுத்திகரிக்கப்படுகிறது.

பொது கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் மற்றும் ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் பிளான்டில் (எதிர் மறை சவ்வுடு பரவல் நிலையத்தில்) சுத்தகரிப்பு முடிந்தவுடன் சுத்தகரிக்கப்பட்ட துாய நீர் உறுப்பினர்களுக்கு மேல்நிலைத்தொட்டி (Overhead tank) மற்றும் பகிர்மான குழாய் மூலமாக பகிர்ந்தளிக்கப்படும்

1.1 அமைவிடம்

புதிதாக தொடங்கப்படவுள்ள இந்த நிறுவனம் SF No. 30/1, 30/2 30/3, அய்யாபிள்ளை தோட்டம், சோமனூர் ரோடு, வேட்டுவப்பாளையம், மங்களம் திருப்பூர் - 641 663 என்ற இடத்தில் அமைய உள்ளது.

இந்த பொது கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையத்தில் 9 பிளிச்சிங் தொழிற்சாலைகள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். அனைத்து உறுப்பினர்களும் சுமார் 1.60 கி.மீ ஆர துாரத்தில் அமைந்துள்ளன. உறுப்பினர்கள் தங்கள் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தியாகும் கழிவு நீரை அவர்கள் உள்ள இடத்திற்கேற்றவாறு பம்பிங் அல்லது கிராவிட்டி மூலமாக வெளியேற்ற உள்ளனர். ஒரு நாளில், 24 மணி நேரத்தில் வெளியேற்றபடும் மொத்த அளவு 13,00,000 லி/நாள் ஆகும். ஏதிர்காலத்தில் விரிவாக்கும் நிலையை கருத்தில் கொண்டு பொது கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம், நாள் ஒன்றிற்கு 15,00,000 லிட்டர் கொள்ளளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

1.2 நிதி ஒதிக்கீடு

துறை	மூலதன முதலீடு மொத்தம்	வருடாந்திர இயக்கச் செலவு
	(ரூபாய் இலட்சத்தில்)	
காற்று மாசுக்கட்டுப்பாடு	12.00	1.00
நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை	642.00	225.00
திடக்கழிவு மேலாண்மை	15.00	35.00
பசுமை வளர்ப்புத்திட்டம்	5.00	2.00
சுற்றுச்சூழல் ஆய்வு	16.00	2.00
மொத்தம்	690.00	265.00

1.3 உறுப்பினர் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீரின் அளவு

அனைத்து உறுப்பினர்களும் பின்னலாடைத் துணி சலவை செய்கிறார்கள். அதன் உற்பத்தி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது..

வ.எண்	உறுப்பினர் தொழிற்சாலையின் பெயர்	உற்பத்தி அளவு	ஒரு நாளில் எதிர்பார்க்கபடும் கழிவு நீர உற்பத்தி லி/நாள்
	விக்னேஸ் பிளிச்சிங்	2000 kg/day	1,50,000
	செந்தில்வேலன் பிளிச்சிங்	2650 kg/day	2,00,000
	ஸ்ரீ அழகப்பா பிளிச்சிங் கம்பனி	1330 kg/day	1,00,000
	HM பிளிச்சர்ஸ்	2650 kg/day	2,00,000
	பிளிச்வெல் கம்பனி	2650 kg/day	2,00,000
	கங்கை பிளிச்சிங	1330 kg/day	1,00,000
	திருப்பதி பிளிச்சர்ஸ்	2000 kg/day	1,50,000

	நியு பாலாஜி பிளிச்சிங் கம்பனி	1330 kg/day	1,00,000
	SNR பிளிச்சிங் பாக்டிரி	1330 kg/day	1,00,000

சுமார் 17500 கிலோ பின்னலாடைத துணி மேலே குறிப்பிடபட்ட தொழிற்சாலைகள் மூலமாக சலவை செய்யப்படுகிறது. இதன் மூலம் 13,00,000 லி/நாள் கழிவு நீர உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

1.4 கழிவு நீரும் அதன் சிறப்பியல்புகளும்

சலவை தொழிற்சாலையில் கழிவு நீர் அந்த தொழிற்சாலையில் ஒரு நாளில் சலவை செய்யப்படும் துணியை சார்ந்துள்ளது. இதனைப் பொருத்து, ஒரு தனி தொழிற்சாலையின் கொள்ளளவு கணக்கிடப்படுகிறது

தண்ணீர் சலவை தொழிற்சாலையில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு கிலோ பின்னலாடைத் துணி சலவை செய்ய சுமார் 75 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. வெளியேற்றபடும் தண்ணீரின் அளவும் தன்மையும் உற்பத்தி செய்முறை நேரத்திற்கு நேரம் மாறுபடும்

கழிவு நீரின் மாசு அளவுகள்

வ.எண்	பரிமானம்	அளவு
1.	pH	6.0 – 9.0
2.	பையோ கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட் 5 days 30 deg.C	100-150 mg/lit
3.	கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட்	300-400 mg/lit
4.	மொத்த மிதக்கும் கழிவுகள்	100-200 mg/lit
5.	மொத்த கலந்துள்ள திடக் கழிவுகள்	3550-4000 mg/lit
6.	குளோரின்	65.0 mg/lit

1.5 கழிவு நீர் சேகரித்தல் மற்றும் எடுத்து செல்லுதல்

உறுப்பினர்கள் தங்கள் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தியாகும் கழிவு நீரை அவர்கள் உள்ள இடத்திற்கேற்றவாறு பம்பிங் அல்லது கிராவிட்டி மூலமாக வெளியேற்ற உள்ளனர்.

குழாய் வடிவைமப்பு

கழிவு நீர் எடுத்துக் செல்லும் குழாய் வட்டவடிவில் HDPE என்ற பொருளில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த குழாயில் Flowmeter, சரியான அளவில் கழிவு நீரை எடுத்து செல்கிறதா என்பதை அறிவதற்காக பொருத்தப்படுகிறது. மற்றும் இதன் வடிவமைப்பு உச்ச அளவு 2 என்ற கணக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மிக குறைந்த விட்டளவு 160 மிமீ என்றும் அதிகபட்ச விட்டளவு 250 மிமீ என்றும் எடுக்கப்புட்டுள்ளது.

பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உறுப்பினர்களான விக்னேஷ் பிளிச்சிங் மற்றும் ஸ்ரீ திருப்பதி ப்ளீச்சர்ஸ் தங்களது கழிவு நீரை நேரடியாக பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பம்பிங் மூலம் அனுப்புவார்கள் இதனைத் தவிர உள்ள அனைத்து உறுப்பினர்களும் கிராவிட்டி மூலம் அனுப்புவார்கள்.

1.6 கொள்ளளவு

. ஒரு நாளில், 24 மணி நேரத்தில் வெளியேற்றபடும் மொத்த அளவு 13,00,000 லி/நாள் ஆகும். ஏதிர்காலத்தில் விரிவாக்கும் நிலையை கருத்தில் கொண்டு பொது கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம், நாள் ஒன்றிற்கு 15,00,000 லிட்டர் கொள்ளளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது

2.0 சுத்திகரிப்பு நிலையத்தின் தொழில் நுட்ப தகவல்

2.1 தேவையான மூலப்பொருட்கள்

வ.எண்	பொருள்	அளவு
	சலவை கழிவு நீர்	1300 KLD
	சுண்ணாம்பு	450 kg/day
	ஆலம்	450 kg/day
	பாலி எலெக்ட்ரோலைட் (cationic)	3.0 kg/day
	பாலி எலெக்ட்ரோலைட (anionic)	3.0 kg/day
	சோடியம் மெட்ட பை சல்பேட்	24.0 kg/day
	ஆன்டிஸ்கேலன்ட்	7.50 kg/day
	ஐட்ரோ குளோரிக் அமிலம்	10.0 litres/day
	விறகு	2000 kg/day

2.2 சுத்திகரிக்கும் முறை

வெவ்வேறு தொழிற்சாலையிலிருந்து வரும் கழிவு நீர் பொது கழிவு நீர் பதப்படுத்தும் நிலையத்திற்கு கிராவிட்டி மூலம் சென்றடைகிறது. இவ்வாறு சென்றடையும் கழிவு நீர் இடை வடிகட்டும் தொட்டிற்க்கு அனுப்பப்பட்டுகிறது. ஸ்கீரின் இடை வடிகட்டி தொட்டியில் வைக்கப்பட்டு மிதக்கும் மற்றும் தண்ணீரில் கரையாத பெரிய பொருட்கள் அனைத்தும் பிரிக்கப்படுகிறது. இதிலிருந்து வரும் கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிற்கு எடுத்து செல்லப்படுகிறது. இதிலிருந்து கழிவு நீர் சமசீராகும் தொட்டிற்கு பம்ப் மூலம் எடுத்துசெல்லப்படுகிறது.

கழிவு நீரை ஒரே அளவிற்கு மாற்றுவதற்கு உயர் வேக மிதக்கும் ஏரியட்டர் சமச்சீர் அளவு தொட்டியில் அமைக்கபடுகிறது. சமபடுத்தப்பட்ட கழிவு நீர் Flash Mixer க்கு பம்ப் செய்யபடுகிறது. அங்கு SMBS வுடன் ஆலம் மற்றும் சுண்ணாம்பும் சேர்க்கப்படுகிறது. Flash Mixer ல் உள்ள அஜிடேட்டர் இந்த இரசாயனங்களை கழிவு நீருடன் நன்றாக கலக்கி வினைபுரியத் துாண்டுகிறது.

Flash mixer ளிருந்து கழிவு நீர் Clariflocculator க்கு அனுப்பப்படுகிறது. Clariflocculator லிருந்து வழிந்து வரும் கழிவு நீர் Clarified water sump ல் சேகரிக்கப்படுகிறது.

Clariflocculator லிருந்து வழிந்தோடும் கழிவு நீர் Clarified தண்ணீர் தொட்டியில் சேர்க்கப்படுகிறது. இந்த வடிகட்டும் துணி polytetrafluoroethylene னால் உருவாக்கப்புடடுள்ளது. இதன் துவாரத்தின் அளவு 0.1 மைக்ரோ மீட்டர். இதன் வெளியேறும் வழி சமநிலையாக்கும் தொட்டிக்கு கொண்டுசெல்லப்படுகிறது.

Clariflocculator லிருந்து வெளிவரும் திடக் கழிவு குழாய் வழியாக thickener க்கு கொண்டு செல்லப்படுகிறது. இதிலிருந்து கட்டியான கழிவு தட்டுப்போன்ற வடிகட்டும் அமைப்பானுக்கு அனுப்பப்படுகிறது. கழிவு தொட்டி மற்றும் filter press லிருந்து பொங்கி வழியும் நீர் மற்றும் வடிகட்டிய நீர் ஆகியவை சமநிலை தொட்டிற்கு அனுப்பப்படுகிறது. கழிவு வடிகட்டும் அமைப்பிலுருந்து வெளிவரும் திட கழிவு 25-30% திடப்பொருளாக இருக்கும். அது trailer மூலமாக சேகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது.

2.3 RO முன் சுத்திகரிப்பு முறை

சுமநிலையாக்கும் தொட்டியிலிருந்து வெளிவரும் நீரானது அழுத்தத்தினால் ஆன மணல் மற்றும் கார்பன் வடிகட்டும் வடிப்பானுக்கு செலுத்தப்படுகிறது. இதில் organics, வண்ணம் சிறிய துகல்கள் வெளியேற்றப்படுகிறது. சுமநிலையாக்கும் தொட்டியில் SMBS இரசாயனம் சேர்க்கப்பட்டு அதிலுள்ள தேவையில்லாத குளோரின் நீக்கப்படுகிறது. இந்த கழிவு நீர் வடிகட்டும் அமைப்பானுக்கு செலுத்தப்படுகிறது. மீதமுள்ள கழிவு மற்றும் சுத்தமாக்குதலினால் உருவாகும் கழிவு நீர் சேகரிப்பு தொட்டிற்கு திருப்பி அனுப்பப்புடுகிறது.

Activated carbon Filter க்கு பிறகு pH சரிசெய்வதற்கு அமிலமும். உப்பு மற்றும் சிலிகா படியாமலிருக்க ஆன்டிசேகலன்ட் சேர்க்கப்படுகிறது.

திட பொருட்களை நீக்குவதற்கு 2 நிலை மைக்ரான் வடிகட்டி அமைக்கப்படுகிறது. இது RO Membrane ல் அடைப்பு ஏற்படுத்தகூடிய 1 மைக்ரோ மீட்டர் அளவுள்ள திட பொருட்களை நீக்குகிறது.

2.4 எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையம் (Reverse Osmosis System)

மைக்ரான் வடிகட்டியிலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட நீர் RO system தில் துாய நீர் கிடைக்க மீண்டும் சுத்திகரிக்கப்பட்டுகிறது.

இந்த பொது சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு 1500 மீ^{3}/நாள் 20 மணி செயல்பாட்டில் சுத்திகரிக்கப்படுகிறது. RO system 3 கட்டநிலைகளில் சுத்திகரிப்பு செய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் நிலை RO-I சுத்தமான நீர் 75% கிடைக்கிறது. இதிலிருந்து வெளியேற்றபடும் அடர்ந்த நீர் 2ம் நிலை RO System ல் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இந்த 2ம் நிலை RO நிலையத்தில் சுமார் 55% சுத்தமான நீர் கிடைக்கிறது. இந்த 2ம் நிலை RO விலிருந்து வெளியேற்றப்படும் அடர்ந்த நீர் 3ம் நிலை RO நிலையத்தில் சுத்தம் செய்யப்படுகிறது. இந்த 3ம் நிலை RO நிலையத்தில் சுமார் 35% சுத்தமான நீர் கிடைக்கிறது. மீதமுள்ள நீர் உப்புத்தன்மை அதிகம் நிறைந்த அடர்ந்த நீராக வெளியேற்றப்பட்டு பல நிலை மெக்கானிக்கல் ஆவியாக்கும் இயந்திரத்தில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது.

2.5 நிராகரிப்பு மேலாண்மை

3 ம் நிலை RO நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் அடர் கழிவு அதிகமான உப்புத்தன்மையுடன் ஒரு நாளைக்கு 95300 லிட்டர் ஆகும். இதனை சுத்தம் செய்ய 5 நிலை கொண்ட மெக்கானிக்கல் Evaporator அமைக்கப்படவுள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் மெக்கானிக்கல் Evaporator சிக்கனமான நீராவி உபயோகத்தில் அதிக அளவு திறனை வெளிபடுத்துவதாக அமைக்கப்படவுள்ளது.

கொள்ளளவு : 95.3 KLD

வடிவைக்கப்பட்ட அளவு : 100 KLD

மொத்த கலந்துள்ள திடக் கழிவுகள் : 78419.85 மி.கி / லி

2.6 சூரிய ஆவியாக்கும் தொட்டி

Evaporator ன் நிராகரிப்பு : 7.64 KLD

Evaporator ல் இருந்து வெளிவரும் நிராகரிப்பின் வெப்பநிலை சுமார் 50 ^{0} C ஆக இருக்கும். இந்த வெப்பநிலையில் ஆவயாக்கும் திறன் மற்ற தட்ப வெப்பநிலையை விட அதிகமாக இருக்கும். இந்த நிலையில் ஆவயாக்கும் திறன் 4.5 மி.மீ / நாள் ஆக அனுமானிக்கப்படுகிறது. சூரிய ஆவியாக்கும் தொட்டிற்க்கு தேவையான இடம் 1697.7 மீ^{2} என கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் சூரிய ஆவியாக்கும் தொட்டிற்க்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் 1700 மீ^{2}.

2.7 சுத்திகரிக்கப்பட்ட நீர் பகிர்மானம்

3 நிலை RO System ம் மூலம் பெறபட்ட சுத்தமான நீர் RO Permate Collection tank கில் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட சுத்தமான நீர் சுமார் 200000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை தொட்டியில் பம்பிங் மூலமாக சேகரிக்கப்படுகிறது. இந்த மேல்நிலை தொட்டியிலிருந்து சுத்தமான நீர் இதற்கென அமைக்கப்படவுள்ள PVC குழாய்கள் மூலமாக ஒவ்வொரு உறுப்பினர் தொழிற்சாலைகளுக்கும், கிராவிட்டி அழுத்தம் மூலமாக பகிர்மானம் செய்யப்படுகிறது. இதற்கான குழாய்கள் அனைத்தும் சாலையின் ஓரத்தில் புதைக்கப்படவுள்ளது. இந்த முக்கிய பகிர்மான குழாயிலிருந்து ஒவ்வொரு கம்பெனிக்கும் தேவையான அளவிற்கு ஏற்ப சிறிய பகிர்மான குழாய்கள் புதைக்கப்படவுள்ளன. ஓவ்வொரு கம்பெனியிலும் ஒரு Flowmeter நிறுவபடவுள்ள்து. அதிலுள்ள பகிர்மானம் மற்றும் பயன்பாட்டு அளவிற்கேற்ப ஏற்ப உறுப்பினர் சலவைத் தொழிற்சாலைகளில் இருந்து கட்டணம் வசூலிக்கப்படும்.

3.0 அடிப்படை சுற்றுச்சூழல் விவரம்

3.1 மாதிரி எடுத்த இடங்கள்

நீர், காற்று, ஒலி, மற்றும் மண் ஆகியவற்றின் தன்மையை அறிவதற்காக தொழிற்சாலையிருந்து 5 கிமீ ஆரத்தில் உள்ள பின் வரும் 5 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மாதிரி எடுக்கப்பட்டன.

- பொது சுத்திகரிப்பு நிலையம்
- வேட்டுவப்பாளையம்
- அக்ரகாரப்புதுார்
- வடுவம்காலிப்பாளையம்
- மங்களம்

3.2 நிலப்பயன்பாடு

இந்த ஆய்விற்கான நிலத்தின் பயன்பாடு பற்றிய விபரங்கள் District Primary Census Handbooks of Coimbatore மாவட்டதிலிருந்து இரண்டாம்கட்ட விபரமாக 2001 ஆண்டிற்கு பெறப்பட்டு ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட புவியியல் பரப்பு 31199.69 ha என கண்க்கிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வு பகுதியில்

குறிப்பிட்ட வனப்பகுதி ஏதும் இல்லை. மேலும் ஆய்வு பகுதியின் ¼ பாகம் நிலப்பகுதியாகும். இதன் பரப்பளவு 9242.74 ha ஆகும். ஆய்வுப் பகுதியின் 4898.78 ா௰ நிலம் விவசாயத்திற்கு உகந்ததாக இல்லை.

3.3 Seismicity

Indian Standard Seismic Zoning map ன் மூலம் இந்த ஆய்வு இடம் Zone-II ல் உள்ளது.

3.4 மண்

குறிப்பிட்ட பொது கழிவு சுத்திகரிப்பு நிலையத்தின் சோதனை செய்யப்பட்ட மண் பரிசோதனை அடிப்படையில் பொதுவாக மண்ணின் தன்மை ஒரே சீராக உள்ளது. மேல் பகுதி களிமண்ணாகவும் சுமார் 1.6 மீ கீழ் சுண்ணாம்பு தன்மை கொன்டதாகவும் உள்ளது. 4.5 மீ கீழ் பாறை தன்மை கொண்டதாகவும் நிலத்தடி நீர் உள்ளதாகவும் உள்ளது. பொதுவாக மண்ணின் தன்மை சிறிது காரத்தன்மை ஒட்டியோ நடுநிலை தன்மை ஒட்டியோ உள்ளது. பொதுவாக இம் மண்ணின் தன்மை பசுமை திட்டதிற்கு ஏற்ப உள்ளது. 1.6 மீ கீழ் கடின தன்மையுள்ளதாக உள்ளது.

ஆய்வின்படி மண்ணின் தன்மை பெரும்பாலும் களிமண்ணாக உள்ளது. விரிவான ஆய்வின்படி இங்குள்ள மண்ணின் தன்மை தாவரம் விளைச்சலுக்கும் பசுமை திட்டத்திற்கு உகந்ததாக உள்ளது.

3.5 சுற்றுப்புற வானிலை

அக்டோபர் மாதம் 2008 ல் குறைந்த வெப்பநிலை 24.58^0 என அளவிடு செய்யப்படுள்ளது. அதிக வெப்பநிலை 28.8^0 என அளவிடு செய்யப்படுள்ளது. காற்றின் ஈரப்பதம் 73-93% என அளவிடப்படுகிறது. 2008 அக்டோபர் மாதம் மழை ஏதும் பெய்யவில்லை..

3.6 காற்று சூழல்

வடகிழக்கு மற்றும் வடமேற்கு திசையில் காற்று வீசுகிறது ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 4 நிலையங்களில் காற்றுமாசு அனைத்தும் மைய மாசு கட்டுபாட்டு வாரியத்தின் குறிப்பிடப்பட்ட அளவிற்கு உள்ளேயே உள்ளன.

3.7 நீர் சூழல்

இப்பகுதியில் சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகளின் pH 7.19 – 7.54 வரை உள்ளது. ஆனால் TDS அளவு 594 – 5480 வரை உள்ளது. ஒரு சில இடங்களை தவிர பெருமான்மை இடங்களில் நீர் குடிப்பதற்கு ஏற்றவாறு இல்லை

3.8 ஒலி சுழல்

பகல் வேளையில் குடியிருப்பு பகுதியில் 45.6 டெசிபல் முதல் 67.6 டெசிபல் வரை உள்ளது. 67.7 டெசிபல் அளவு சாலைகளில் செல்லும் வாகன போக்குவரத்தால் ஏற்படுகிறது. இரவு நேரங்களில் 38.9 டெசிபல் முதல் 57.5 டெசிபல் வரை பதிவாகியுள்ளது. இரவு நேர அதிக பட்ச 45. டெசிபல் விட கூட இருப்பதற்கான காரணம் அப்பகுதியில் உள்ள வாகன போக்குவரத்து. இரவு வேலையிலும் பகல் வேவையிலும். ஒலியின் அளவு குறிப்பிடப்பட்ட அளவிற்குள்ளே உள்ளது.

3.9 இயற்கைசூழல்

இங்கு பாதுகாக்கப்பட்ட வனபகுதி ஏதும் 10 கி.மீ தொலைவில் இல்லை. இப்பகுதியில் பாதுகாக்கபடவேண்டிய தாவரமோ விலங்கினமோ ஏதும் இல்லை.

3.10 போக்குவரத்து சூழல்

போககுவரத்திறகான சர்வே மங்களம் சோமனுர் சாலையில் நடைப்பெற்றது. காலை 8.00 – 10.00 மணி வரை மங்களம் நோக்கி செல்லும் வாகனங்கள் அதிகமாக உள்ளன. மாலை நேரத்தில் 6.00 - 8.00 மணி வரை சோமனூர் நோக்கி செல்லும் வாகனங்கள் அதிகமாக உள்ளது.

3.11 சமூக பொருளாதார சூழல்

இப்பகுதியில் ஆண்களா 48.71%. பெண்கள் 49.82% உள்ளனர் இங்கு படித்தவர்கள் 71% (2001 கணக்கெடுப்பின்படி) 58.2% பேர் ஏதாவது ஒரு பணியில் ஈடுப்பட்டுள்ளனர.

3.12 அடிப்படை வசதிகள்

இப்பகுதியில் குடி நீர் சபளைக்கு காவேரி ஆற்று நீரும், தேவையான இணைப்பு சாலை வசதிகளும் நன்கு அமைய பெற்றுள்ளன. மருத்துவமனை, பள்ளி வசதிகளும் உள்ளன. மேலும் இப்பகுதி திருப்பூர், சோமனுர்ர், பல்லடம் ஆகிய ஊர்களுடன் அரசு போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து வாகனங்களால் நன்கு இணைக்கப்பட்டுள்ளன.

4.0 எதிர்பார்க்கப்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகள்

இந்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுவதால் உண்டாகும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் பற்றி கீழே விவரிக்க்ப்படுள்ளது.

4.1.1 கட்டுமானப் பிரிவின்போது

பொது சுத்திகரிப்பு நிலையம் கட்டுமானம் பிரிவின்போது உண்டாகக்கூடிய பாதிப்புகள் மிக குறைவு. கட்டுமானம் பிரிவின்போது பின்வரும் நடவடிக்கைகள் மிக முக்கியமாக கருதப்படுகிறது.

- இடம் தேர்வுசெய்தல்
- நிலம்தோண்டுதல் மற்றும் நிரப்புதல்
- வெட்டுதல் மற்றும் துளையிடுதல்
- கான்கிரட் கலக்குதல்
- கான்கிரட் கட்டுதல்
- இரும்பு கட்டமைப்பு உருவாக்குதல்
- சாலை கட்டுமானம்
- சாயம் அடித்தல்
- சுத்தமாக்குதல்

4.1.2 போக்குவரத்து

மூலப்பொருட்களை வண்டியின் மூலம் எடுத்துச்செல்வதால் எந்தவித போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதில்லை. கட்டுமானத்தொழிலில் எந்தவிதமான கனரக இயந்திரங்கள் பயன்படுத்தபோவதில்லை.

4.1.3 நிலப்பயன்பாடு

தமிழ்நாடு அரசு இந்த இடத்தினை எந்த பிரிவிலும் சேராத இடமாக அறிவித்ததால் தொழிலதிபர்கள் இந்த இடத்தில் தொழிற்சாலைகள் கட்ட முன் வந்துள்ளனர்.

4.1.4 நீர்

தற்போது நிரின் தேவை நாள் ஒன்றிற்கு 40 – 60 மீ ^{3}/நாளாகும். இந்த கட்டுமானம் முடிவதற்கு 12 மாதங்களாகும். இதற்கு தேவையான நீர் சுமார் 15000 மீ ^{3} ஆகும்.

4.1.5 காற்று

கட்டுமானப்பிரிவில் தோண்டுதல், நிரப்புதல;, கட்டிடம் கட்டுதல் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகியவை துகள்களை உருவாக்குவதால் SPM அளவை அதிகமாக்குகின்றன. ஆனால் அவை அந்த இடத்தினுள்ளேயே இருப்பத்தால் எந்தவித பாதிப்பும் இல்லை. போக்குவரத்து ஊர்திகளாள் உருவாகும் SO2, NOx மற்றும் CO அளவு காற்றின் தன்மையை சிறிதளவே மாசுப்படுத்துவதால் சுற்றுசூழல் பாதிப்பு அதிகம் இல்லை.

4.1.6 உயிரியல் சூழல்

இந்த இடத்தில் புல் மட்டுமே உள்ளன. கடடுமானத்தினால் இவை மட்டுமே பாதிக்கப்படுகிறது.

4.1.7 ஒலி

கட்டுமானத்தினால் ஒலி மிக அதிகமாக இருக்கும். இதனை தவிற்பதற்கு மாலை 5.00 மணியிலிருந்து காலை 9.00 மணிவரை கட்டுமான வேலையினை நிறுத்தி வைப்பதால் மாலையிலும் இரவிலும் அமைதியான சூழ்நிலை நிலவும்.

4.1.8 சமூகப் பொருளாதார நிலை

சமூக மக்கள் சுமார் 150 பேர் இந்த கட்டுமானம் மூலம் வேலை வாய்ப்பினை பெருகிறார்கள்.

4.1.9 விபத்து

இந்த கட்டுமானம் மூலம் விபத்துக்கள் ஏற்கடலாம். இதனை தவிற்பதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4.1.10 ரிசோர்ஸ்சஸ்

இதற்கு தேவையான எரிபொருளானது வண்டியின் மூலம் எடுத்துவரப்படும். மூலப்பொருட்களை மிக அருகிலுள்ள இடங்களில் வாங்குவதால் எரிப்பொருளின் தேவை குறைக்கப்படுகிறது. செங்கலுக்கு பதிலாக கான்கிரட் ப்ளாக்ஸ் பயன்படுத்தப்படுவதால் நீரின் தேவை குறைக்கப்படுகிறது.

4.2 இயங்கும் நிலை

4.2.1 நீர் சூழல்

இந்த தொழிற்சாலை வருவதனால் நீர் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. தொழிற்சாலையிலிநுத்து வெளிவரும் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் சலசைத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இந்த சுத்திகரிப்பு நிலயதின் பூஜிய நீர் வெளியேற்றும் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இதன் மூலம் சலவைப்பட்டறைக்கு தேவையான சுத்தமான நீரின் அளவு குறைக்கப்படுகிறது.

கழிவு நீரானது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் **எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையம்** முறையில் சுத்திகரிக்கப்படும். இதிலிருந்து வெளிவரும் நிராகரிப்பானது சுண்டுகலனில் சுத்திகரிக்கப்படுகிறது. சுண்டுகலனிலிருந்து (Evaporator) வெளிவரும் நிராகரிப்பு சூரியன்

ஆவியாக்கும் தொட்டியில் சுத்திகரிக்கப்படும். **எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையம் மற்றும் சுண்டுகலனில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் சலவைப்பட்டறையில்** பயன்படுத்தப்படுகிறது. இந்த தொழிற்சாலையின் கழிவறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர் நேரடியாக செப்டிக் டாங்க் மற்றும் உறிஞ்சும் முறையில் அமைக்கப்பட நீண்ட தொட்டி ஆகியவற்றில் சுத்திகரிக்கப்படுகிறது.

4.2.2 காற்று சூழல்

சுத்திகரிப்பு நிலையத்திலிருநந்து கொதிகலன், டீசல் ஜெனரேட்டர் இயங்கும்போது மட்டும் மாசு காற்று வெளியேறும். கொதிகலனில் கொள்ளளவு 2000 கி.கி./மணி. டீசல் ஜெனரேட்டரின் கொள்ளளவு 225 KVA. மாசு உரிய உயரத்தில் புகை போக்கி மூலமாக வெளியேற்றபடுகிறது. வாகனத்திலிருந்து சுக்திகரிப்பு இரசாயனம் ஏற்றும் போதும் இறக்கும் போதும் தேவையான பாதுகாப்பு நடைவடிக்கை எடுக்கப்படும்

காற்று மாசு மேலான்மை

வ.எண்	பொருள் விள்க்கம்	MOC	புகைபோக்கி விட்டம்	புகைபோக்கி உயரம்
1	டீசல் ஜெனரேட்டர்	MS	15 செ.மீ	7.5 மீ
2	பாய்லர்	MS	30 செ.மீ.	12 மீ

4.2.3 ஒலி சூழல்

ஒலி மாசு ஏற்படுத்தும் முக்கிய கருவி டீசல் ஜெனரேட்டர். இந்த ஜெனரேட்டர் ஒலி தடுப்பு உறையினால் மூடப்பட்ட நிலையில் வாங்கப்படுகிறது. இதனால் ஒலியின் அளவு குறைக்கப்படுகிறது. மேலும் சுத்திகரிப்பு நிலையத்தின் நான்கு பக்க ஓரங்களில் மரங்கள் நடபடுவதால் ஒலியின் தாக்கம் குறைக்கப்படுகிறது.

4.2.4 திடக்கழிவு வெளியேற்றம்

பொது சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறு சுழற்சி நிலையத்திலிருந்து வெளிவரும் கழிவானது கீழ் காணும் முறைகளில் வெளியேற்றப்படுகிறது. பொது சுத்திகரிப்பு நிலையம் Industrial Waste Management Association (IWMA) ல் உறுப்பினராக உள்ளது. அவர்கள் அமைத்துள்ள திட கழிவு மேலாண்டை நிலையத்திற்கு அனைத்து திடக்கழிவுகளும் அனுப்பிவைக்கப்படுகின்றது.

வ.எண்	திடக்கழிவு உருவாகும் இடம்	திடக்கழிவின் வகை	வெளியேற்றும் முறை
	இடைத்தடுப்பு (Screen Chamber)	பெரிய மற்றும் மிதக்கும் பொருட்கள்	IWMA க்கு அனுப்பப்படுகிறது
	Filter Press	Cake	IWMA க்கு அனுப்பப்படுகிறது
	வடிக்கட்டும் துணி	துணி	IWMA க்கு அனுப்பப்படுகிறது
	அழுத்தக்தினால் வடிகட்டும் அமைப்பான்	மண் மற்றும் Gravel	IWMA க்கு அனுப்பப்படுகிறது
	கார்பன் வடிகட்டும் அமைப்பான்	கார்பன்	மறு சுழற்சி செய்யப்படும்
	எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையத்திலிருந்து வெளிவரும் மெம்ப்ரேன்	மெம்ப்ரேன்	மெம்ப்ரேனின் கால அளவு 4-5 வருடம். இதன் பிறகு பயன்படுத்தப்பட்ட மெம்ப்ரேன் IWMA க்கு அனுப்பப்படுகிறது
	கொதிகலன்	சாம்பல்	IWMA க்கு அனுப்பப்படுகிறது
	சூரிய ஆவியாக்கும் தொட்டி	உப்பு	IWMA க்கு அனுப்பப்படுகிறது

4.2.5 உயிரியல் சூழல்

இப்பகுதியில எவ்வித அபூரவ அல்லது நுண்ணிய தாவரம் மற்றும் விலங்கின வகைகள் ஏதுமில்லை. இப்பகுதி வறண்ட நிலம் என்பதால் இங்குள்ள தாவரம் மற்றும் விலங்கினத்திற்கு இப் பொது கழிவு சுத்திகரிப்பு நிலயததால் பாதிப்பு ஏதுமில்லை.

மேலும் இந்நிறுவனத்தைச் சுற்றி பசுமை தோட்டம் அமைக்க உள்ளதால் சுற்றுசூழல் மேம்பாடு அடையும்.

4.2.6 சமூக பொருளாதர நிலை

இப் பொது கழிவு சுத்திகரிப்பு நிலயத்தின் செயல்பாடு மற்றும் மறு சீரமைப்பு நிலைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க இருப்பதால் இப்பகுதியில் சமூக பொருளாதர முன்னேற்றம் ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனம் இயங்கும் போது தேவைப்படும் பணியாட்களில் 50% உள்ளுர் மக்களை பணிக்கு அமர்த்தபடுவதால் நிறுவனம் இயங்கும் போது சமூக பொருளாதார மேன்பாடு ஏற்படும் என்பது தின்னம்.

4.2.7 போக்குவரத்து

இந்த பொது சுத்திகரிப்பு தேவையான இரசாயனம் உள் வருகை மற்றும் ஸ்லட்ஜ் வெளியேற்றம் 10 நாட்களுக்கு ஒரு முறை நடைபெறுவதால் போக்குவரத்து பாதிப்பு ஏதும் ஏற்படபோவதில்லை.

5.0 சுற்று சூழல் கண்காணிப்பு

தொழிற்சாலை இயங்கும் போது சுற்றுசூழலின் தன்மையை அறிவதற்காக கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சுற்று சூழல் கண்காணிப்பு

வ.எண்	பொருளடக்கம்	பரிமானம்	கண்கானிக்கும் இடைவெளி
	காற்றின் தரம்	SO2, NOx, PM	மாதம் ஒரு முறை
	நிலத்தடி நீரின் தரம்	TDS, குளோரேட. சல்பேட், BOD, COD	மாதம் ஒரு முறை
	மண்ணின் தரம்	குளோரேட். சல்பேட்,	
	சப்த அளவு		மாதம் ஒரு முறை

6.0 கூடுதல் ஆய்வு

6.1 மக்களுடன் கலந்தாய்வு

மக்களுடன் கலந்துரையாடுவதால் நல்ல முடிவுகள் எடுக்க உதவியாக இருக்கும். மக்களுடன் கலந்துரையாடுவது மட்டுமல்லாமல் முக்கிய முடிவுகள் எடுப்பதிலும் அவர்கள் பங்கு வெறவேண்டும். பொதுக்கூட்டம் மூலமாக கலந்துரையாடுதல் நடத்த வேண்டும். தொழிற்சாலையின் பயன்பாடுகளை மக்களுக்கு செய்திதாள்மூலமாக தெரியப்படுத்தவேண்டும். கலந்தாய்வு பற்றிய வபரங்கள் EIA Reportல் உள்ளது.

6.2 சமூகப் பொருளாாதார நிலை

இந்நிறுவனம் அமைய இருக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள கிராமம் வேட்டுவப்பாளையம் ஆகும். இக் கிராமம் சுமார் 5176 மக்கள் தொகையைக்கொண்டது. இவற்றில் ஆண்கள் 2609 பெண்கள் 2567 ஆகும். இது 2001 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபர அடிப்படையில் பெறப்பட்டது. இங்குள்ள மக்களின் முக்கிய வருவாய் இதனைச் சுற்றி உள்ள சலவை மற்றும் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகள் பனியன் கம்பெனிகள் போன்றவை மூலம் பெறப்படுகிறது. இங்குஅமைய இருக்கும் இது போன்ற பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மேற்படி தொழிற்சாலைகளின் நிரந்தரத் தன்மையை உறுதிசெய்கின்றது. மேலும் வேலை வாய்ப்பை அதிகரிக்கின்றது.

6.3 தொழிற்சாலையின் பயன்பாடுகள்

- இத்தொழிற்சாலை தொடங்கபடுவதால் நிலத்தடி நீருக்கு எந்தவித பாதிப்புமில்லை.
- இத்தொழிற்சாலை தொடங்கபடுவதால் நிலத்தடி நீர் குறைவாக எடுக்கப்படுவது மட்டுமல்லாமல் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.
- பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினால் மூலதனம் மற்றும் இயக்கும் செலவு சேமிக்கப்படுகிறது.
- இத்தொழிற்சாலை தொடங்கபடுவதால் மக்கள் யாரும் இடம்பெயர வாய்ப்புக்கள் இல்லை.
- மேலும் இந்நிறுவனம் இதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் சுமார் 15 பேருக்கு நேரடியாகவும் 150 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது.
- இத்தொழிற்சாலை தொடங்கபடுவதால் இதனை சுற்றியுள்ள மக்களின் சமூகப் பொருளாாதார நிலை உயருகிறது.
- உறுப்பினர்களின் சுத்தமான நீர் வெளியில் ∴ பூமியிலட இருந்து எடுக்கும் அளவு அபரிமிதமாக குறைகிறது.

7.0 சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம்

சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டதின் குறிக்கோள் இந்த திட்டத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைக்கவும், சுற்றுச்சூழலை பாதுக்காக்கவும் சுற்றியுள்ள மக்களை பாதுகாப்பதற்காகவும் அமையவேண்டும்.

சுற்றுக்சூழல் மேலாண்மைத் திட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைப்பதற்காகவும் தவிற்பாற்காகவும் தயாரிக்கப்படுகிறது.

சுற்றுக்சூழல் மேலாண்மைத் திட்டம்

வ.எண்	செயல்பாடு	சற்றுசுழல் கேடுகள்	தவிற்பதற்கான செயல்பாடுகள்
கழிவு மேலாண்மை			
1.	இரசாயனங்கள் இறக்கும் போது	இரசாயனம் சிந்துதல்	அனைத்து இரசாயனம் HDPE பை அல்லது மூடிய பாத்திங்களில் வாங்கபடும்
		தொழிளாள஌்களின் உடல் நிலை பாதிப்பு	தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கப்படும்
2..	திட கழிவுகள் லாரிகளில் ஏற்றும் போது	பறக்கும் துகல்கள்	தண்ணீர் தெளிக்கப்படும்
		கழிவுகள் சிந்துதல்	வாகனத்தில் கசிவு ஊதும் இல்லாமல் பார்த்துக்கொள்ளபடும்
		தொழிளாள஌்களின் உடல் நிலை பாதிப்பு	தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கப்படும்
போக்குவரத்து			
1.	கழிவுகளை எடுத்துச் செல்லும்போது	சாலைகளில் கழிவுகள் சிந்துதல்	முடிந்தவரையில் அனைத்து கழிவுகளும் மூடிய கன்டைனர்களில் எடுத்துச் செல்லப்படும்
		போகும் வழியில் கழிவுகள் சிந்துதல்	வாகனங்களில் ஏற்றப்பட்ட கழிவுகள் HDPE சீட்களால் மூடப்பட்டு எடுத்துச்செல்லப்படும்
காற்று மேலாண்மை			
1.	கொதிகலன்	விறகு எரிப்பதனால் வெளிவரும் SPM, CO, Nox	12 மீ உயரம், 30 செ.மீ விட்டம் புகைபோக்கி பொருத்தப்படவுள்ளது.
2.	டீசல் ஜெனரேட்டர்		7.5 மீ உயரம், 15 செ.மீ விட்டம் புகைபோக்கி பொருத்தப்படவுள்ளது.
நீர் மேலாண்மை			
1.	கழிவு நீர் சேகரிப்பு	கழிவு நீர் வெளியேறுதல்	கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் மற்றும் மேன் ஹோல் குறிப்பிட்ட இடைவெளியில் சுத்தம் செய்யப்படும்
ஒலி மேலாண்மை			
1.	டீசல் ஜெனரேட்டர்	சப்த அளவு	இந்த ஜெனரேட்டர் ஒலி தடுப்பு உறையினால் மூடப்பட்ட நிலையில் வாங்கப்படுகிறது. இதனால் ஒலியின் அளவு குறைக்கப்படுகிறது. மேலும் சுத்திகரிப்பு நிலையத்தின் நான்கு பக்க ஓரங்களில் மரங்கள் நடபடுவதால் ஒலியின் தாக்கம் குறைக்கப்படுகிறது
திடக்கழிவு மேலாண்மை			

1.	திடக்கழிவு	நிலப்பாதிப்பு	பெரிய மற்றும் மிதக்கும் பொருட்கள், Filter துணி மணல் மற்றும் Gravel, கார்பன், மெம்ப்ரேன், சாம்பல் மற்றும் உப்பு IWMA க்கு அனுப்பப்படும்
கண்காணிப்பு			
1.	கண்கானிப்பு நடவடிக்கை	நிலத்தடி நீர்	நிலத்தடியிலிருந்து மாதம் ஒரு முறை மாதிரி எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும்
2.		காற்றின் தரம்	மாதம் ஒரு முறை மாதிரி எடுக்கப்பட்டு **SO2, NOx, PM** ஆய்வு செய்யப்படும். முடிவு குறிப்பிட்ட அளவைவிட அதிகமாக இருப்பின் உடனடியாக தகுந்த நடவடிகடகை எடுக்கப்படும்
3.		மண்ணின் தரம்	மண்ணின் தரத்கை ஆராய்வதற்கு குறிப்பிட்ட இடைவெளியில் மாதிரி எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும்

7.1 பசுமை வளர்ப்புத் திட்டம்

புதிதாக தொடங்கப்பட உள்ள ஆலை வளாகத்தில் சுமார் 0.50 ஏக்கர் அளவு பசுமை வளர்ப்புத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு மரங்களின் இடையில் சுமார் 6 – 8 மீ அளவு இடைவெளி விடப்பட உள்ளது. மேலும் இந்நிறுவனத்தின் மூலம் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் நன்கு முன்னேற வாய்ப்புள்ளது.

மேலும் இந்த ஆலை நிறுவப்படுவதன் மூலம் எந்தவித சுற்றுப்புற சூழல் பாதிப்பும் ஏற்படாது என்பதை இதன் மூலம் உறுதி கூறுகின்றோம்.